**பதிவுத் தபால்**

# கருவூல கணக்குத் துறை

அனுப்புநர்
திரு.ச.சுந்தர், பி.எஸ்.சி, எம்.சி.எ.,
கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம்,
விருதுநகர்.

பெறுநர்
முதன்மைச் செயலர் நிதித்துறை,
நிதித்துறை (மருத்துவக் காப்பீடு),
தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9

**ந.க.எண்.1013126/2024/என்2 நாள் : 03.12.2024**

மதிப்பிற்குரிய ஐயா,

www.Padasalai.Net

பொருள் : புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2021 (Employees) – திருசா.தா.இராஜேஷ். விருதுநகர் கிளை மாவட்டத் தலைவர், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி- இடைநிலை ஆசிரியர் திருமதி.ஜெயா என்பவர் மதுரை Dr.அக்ர்வால் கண் மருத்துவமனையில் 06.11.2024 அன்று கண்புரை அறுவைச் சிகிச்சை செய்தது -புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அரசாணைக்கு புறம்பாககாப்பு காப்பீட்டு நிறுவனம் சிகிச்சைத் தொகை **ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) வழங்க மறுத்ததன்** மீது நடவடிக்கை எடுக்க வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை : முதலமைச்சரின் தனிப் பிரிவு முகாம் மனு எண்..10443170 நாள்: 07.11.2024.

******************

பார்வையில் காணும் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுவில் மனுதாரர் திருசா.தா.இராஜேஷ். விருதுநகர் கிளை மாவட்டத் தலைவர், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி என்பவர் இடைநிலை ஆசிரியர் திருமதி.ஜெயா, மதுரை Dr.அகர்வால் கண் மருத்துவமனையில் 06.11.2024 அன்று கண்புரை அறுவைச் சிகிச்சை மேற்கொண்டதில், அச்சிகிச்சைக்கான செலவினத் தொகை ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்)-தில் காப்பீட்டு நிறுவனம் ரூ.21,000/-மட்டுமே வழங்கியதாகவும், அறுவைச் சிகிச்சை முடித்ததும் மதுரை Dr.அகர்வால் கண் மருத்துவமனை Discharge Summary, Lens Invoice போன்ற ஆவணங்களைத் தரமறுத்தால், மீதித் தொகை காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படவில்லை.

எனவே, பார்வையில் காணும் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு நகல் தங்களின் மேலான பார்வைக்காகவும், மீதித் தொகை **ரூ.9,000/-(ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்)**-ஐ இடைநிலை ஆசிரியர் திருமதி.ஜெயா என்பவருக்கு கிடைக்கப்பெற ஆவண செய்யுமாறும் இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். .

**இணைப்பு**: பார்வையில் காணும்
முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு நகல்

கருவூல அலுவலர்,
விருதுநகர்.

**நகல்**
திருசா.தா.இராஜேஷ்.
மாவட்டத் தலைவர்,
தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
விருதுநகர் கிளை, 22, அன்பு நகர் முதல் தெரு,
அருப்புகோட்டை -626101. கைபேசி எண்:9790381395.

- தகவலுக்காக.